# கர்த்தருடைய கிருபையினால் ......

**சாட்சி : சகோதரி ஜெயசீலி கிறிஸ்டோபர், நாசரேத்.**

சங் 71 : 15. **கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும்**

**என் சிறுவயதுதொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர்.**

## தாயின் கருவில் என்னை கண்ட தேவன்

கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக! நான் ஒரு பரம்பரை கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவள். ஆனால் கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்படவில்லை. ஏனென்றால் என் பெற்றோரும் கிறிஸ்துவ வாழ்க்கையை குறித்து தெரியாதவர்களாகவே இருந்தார்கள். நான் என்னுடைய வீட்டில் 4 வது பிள்ளை. எனக்கு பின் ஒரு தம்பி உண்டு.

நான் 5–ம் வகுப்பு படிக்கும் பொழுது என் தகப்பனார் சுகவீனமாக இருந்ததினால், தினமும் ஆலயத்துக்கு சென்று அங்கிருந்து எண்ணெய் கொண்டு வந்து, என் தகப்பனார் மீது தடவி ஜெபிப்பது உண்டு. ஆலயம் செல்ல மிகுந்த வாஞ்சை உண்டு. எந்தக் கூட்டம் நடந்தாலும் செல்வேன்.

இப்படி இருந்த என் வாழ்க்கை என் தகப்பனார் இறந்ததும் படிப்படியாக மாறி, ஆலயம் செல்வது குறைந்தது. சினிமா பார்க்க பழகிவிட்டேன். 9 வது வகுப்பு படிக்கும் பொழுது கதைப்புத்தகம் படிப்பது, சினிமா பார்ப்பது முதலியவைகளினால் மிகவும் மோசம் போனேன். ஞாயிற்றுக்கிழமை வந்தால் ஆலயத்துக்கு போகச் சொல்வார்களே என்று மிகவும் கஷ்டமாக இருக்கும். ஏதாவது சாக்கு போக்கு சொல்லிவிட்டு ஆலயத்திற்குப் போவதை தட்டி கழிப்பேன். ஊழியக்காரர்களைப் கண்டால் பரியாசம் பண்ணுவேன். இவ்விதமான பாவங்களில் சிக்கியிருந்த என்னை தாயின் கருவிலேயே முன்குறித்த கர்த்தர் சிட்சிக்க ஆரம்பித்தார்.

திடீரென்று வியாதிப் படுக்கையில் ஆனேன். அப்பொழுது என்னையறியாமலேயே ஜெபிக்க ஆரம்பித்தேன். வேதத்தின் கடைசியிலிருந்து வாசிக்க ஆரம்பித்தேன். அப்பொழுது வெளிப்படுத்தின விசேஷம் படித்துக்கொண்டிருக்கும்பொழுது ஆண்டவர் என்னோடு பேசினார்.

பாவ உணர்வைத் தந்தார். ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தமாக்க என்னை சிட்சையின் மூலம் சந்திக்க போவதை அறிந்து ஜெபித்தேன். ஆனால் எனக்கு பாவ மன்னிப்பின் நிச்சயம் கிடைக்கவில்லை. அவ்விதமான படுக்கையில் சில கனவுகள் என்னை ஆட்கொண்டது. விக்கிரகங்கள் சூழ்ந்திருக்கும் இடம் தெரியாத இடத்தில் நின்று, இயேசுவே ஜீவனுள்ள ஆண்டவர் என்று சாட்சி சொல்லிக் கொண்டு போவதாக தினமும் எனக்கு கனவில் தெரிந்தது. இதை வெளியே சொல்லவும் முடியாமல் தவித்தேன். ஆனாலும் படிப்படியாக வீட்டில் சொல்ல ஆரம்பித்தேன்.

என் வீட்டில் இவளுக்கு பேய் பிடித்துள்ளது. அதனால்தான் இந்துக் கோயில் எல்லாம் தெரிகிறது என்று மந்திரவாதிகளைக் கூப்பிட்டு பேய்ப் பிடித்திருக்கிறதா என்று பார்க்க முனைந்தனர். அந்த சமயம் போராடி ஜெபித்தேன். ஆண்டவரே எனக்கு நீர் இதிலிருந்து பூரண சுகம் கொடுத்தால் உம்மைக் குறித்துச் சாட்சி கூறுவேன். உம்முடைய ஊழியத்தை செய்வேன் என்று என்னையறியாமலேயே பொருத்தனை பண்ணினேன். மந்திரவாதியிடம் பார்க்க வேண்டும் என்று என் தாயார் கூறியபோது, நான் கண்ட தரிசனத்தையும் கர்த்தரோடு பண்ணின பொருத்தனையையும் என் அம்மாவிடம் கூறினேன். உடனே என் அம்மாவும், அவ்விதம் உனக்கு சுகம் கிடைத்தால் ஊழியத்திற்கு போ என்று சொல்லிவிட்டார்கள்.

அந்த சமயம் எங்கள் வீட்டில் நானும், தம்பியும் அம்மாவுமே இருந்தோம். எனது ஒரு அக்கா நர்ஸாக வேலை பார்த்துக் கொண்டிருந்ததால் வீட்டில் இல்லை. கடைசியாக மற்றவர்களுடைய கண்டிப்பினால் ஆஸ்பத்திரி சென்றோம். கர்த்தருடைய கிருபையினால் இரண்டே நாளில் சுகம் கிடைத்தது. அப்பொழுது யாவருக்குமே ஆச்சரியமாக இருந்தது.

நான் S.S.L.C. படித்துக் கொண்டிருந்த போது ஒரு நாளில் Friends எல்லோருமே சினிமா பார்க்க திட்டமிட்டு என்னையும் அழைத்தார்கள். நான் சரி என்று சொல்லிவிட்டேன். ஆனால் என்னுள்ளத்தில் ஒரே போராட்டம் . போராட்டத்தோடு கூட சினிமாவுக்கு சென்றுவிட்டேன். அன்று எனக்குள் ஒரு மாற்றம். சினிமா பார்க்கவே பிடிக்கவில்லை. எப்படியோ 3 மணி நேரம் கழிந்தது. வீட்டிற்கு வந்தேன். என் தாயார் மிகவும் என்னைக் கடிந்து கொண்டார்கள். நீ சுகமானதும் இப்படி சினிமாவுக்கு போய்விட்டாயே ?ஆண்டவர் ஊழியம் செய்வேன், தரிசனம் கண்டேன் என்றாயே ? என்று கூறினார்கள்.

அப்பொழுது, **"அம்மா, நான் இனிமேல் சினிமாவுக்குப் போவதாக இல்லை"** இதுதான் **"கடைசியாக சென்றது என் வாழ்க்கையில்"** என்று சொல்லிவிட்டு கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்டேன். அன்று முதல் என் வாழ்க்கையில் சினிமாவை வெறுக்க ஆரம்பித்தேன்.

1970–ம் ஆண்டில் எங்கள் ஊர் நாசரேத்தில் V.B.S. எடுக்க சென்றிருந்தேன். அதுவரை ஊழியம் என்றால் என்ன என்றே தெரியாது. அந்த V.B.S. 10 நாட்களும் மோட்ச பிரயாணதைப் பற்றி கூறினார்கள். அது என் வாழ்க்கைக்கு ஏற்றதாக இருந்தது. ஆனால் இரட்சிக்கப்பட்டேன் என்ற நிச்சயமே இல்லாததினால் யாரிடமும் சொல்லவும் இல்லை. இரட்சிக்கப்பட்டாயா ? என்று கேட்டாலும் 'இல்லை' என்றே பதில் சொல்வேன். என்னுடைய பாவம் மன்னிக்கப்பட்டது என்று எப்படித் தெரியும் என்ற கேள்வி எனக்குள் எழும்பியது.

அந்த சமயம் **I யோவான் 1:9 - ல் நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.** என்பது அன்றுதான் தெரிய வந்தது. இந்த வசனம் V.B.S. கடைசி நாளில் எனக்கு ஆலோசனையாகக் கொடுக்கப்பட்டது. என் மனதில் அன்று பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொண்டேன். என்னை–யறியாமலேயே ஒரு சந்தோஷம் என்னை ஆட்கொண்டது. எனது அனுபவத்தை யாவரிடமும் கூற ஆரம்பித்தேன்.

கர்த்தருடைய கிருபையினால், 1970 மே V.B.S. கடைசி நாளில் கர்த்தர் என்னை இரட்சித்தார் என உறுதி செய்து கொண்டேன்.

**"ஆரோனைப் போலத் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய**

**ஒருவனும் இந்த கனமான ஊழியத்துக்குத்**

**தானாய் ஏற்படுகிறதில்லை."** எபிரெயர் 5 : 4